வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு கழக பொதுச் செயலாளர், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், கழக கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் வீ.எஸ்.விஜய், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர் வி.எம்.டி.ஏ.பாலாஜி மற்றும் கலந்து கொண்டனர்.

பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டின் சாதனை தொடரட்டும்!

‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஏப். 15 -

பொருளாதார வளர்சியில் தமிழ்நாட்டின் சாதனை தொடரட்டும் என்று ‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்து ஏப். 14, 2025 தேதிய ‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளதாவது:-

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய உயரத்தை அடைந்திருக்கிறது தமிழ்நாடு. 2024-25இல், ‘உண்மையான பொருளாதார வளர்ச்சி’யில் 9.69 சதவீதத்தைத் தொட்டு, இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 2032-33இல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கை அடையத் திட்டமிட்டுவரும் தமிழ்நாடு அரசு, அதை நோக்கிய பயணத்தில் உறுதியாக நடைபோடுவதை இந்தச் சாதனை உறுதிசெய்கிறது.

பணவீக்கத்தைக் கணக்கில் கொள்ளாமல் மதிப்பிடப்படும் உண்மையான பொருளாதார வளர்ச்சியானது ஒரு மாநிலம் அடைந்துவரும் பொருளாதார வளர்ச்சி மீதான துலக்கமான பார்வையை அளிக்கக்கூடியது. அந்த வகையில், மத்திய புள்ளியியல் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தரவுகளின்படி. 2023-24இல் ரூ.15.71 லட்சம் கோடியாக இருந்த

இந்து தமிழ்

பொருளாதார வளர்ச்சியில் முதலிடம்: தமிழகத்தின் சாதனை தொடரட்டும்!

தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) கடந்த 2024-25இல் ரூ.17.24 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது. 2011-12ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் நிலையான விலை மதிப்பின்படி இது 9.69% வளர்ச்சி ஆகும். சேவைகள் துறை (12.7%), இரண்டாம் நிலைத் துறை (9%) ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி இதற்கு முக்கியப் பங்களித்திருக்கிறது.

இதற்கு முன்னர் 2017-18இல் 8.59% என்கிற உயரத்தைத் தொட்டிருந்த தமிழ்நாடு, பெருந்தொற்றுக் காலத்தில் (2020-21) நாட்டின் பெரும்பாலான மாநிலங்கள் எதிர்மறை வளர்ச்சியைக் கண்ட நிலையிலும், 0.07% என நம்பிக்கையூட்டும் வகையில் ஸ்திரத்தன்மை காட்டியது.

நிதிநிலை அறிக்கையை ஒட்டி, கடந்த மாதம் தமிழ்நாடு அரசு முதன்முதலாக வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கை, கடந்த ஆண்டு சென்னை பொருளியல் நிறுவனத்தின் பொருளாதார நிபுணர்கள் முன்வைத்த கணிப்பு ஆகியவற்றை விடவும் அதிக வளர்ச்சியைத் தமிழ்நாடு அரசு கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பணவீக்கத்தையும் கணக்கில் கொண்டு மதிப்பிடப்படும் பெயரளவு வளர்ச்சி விகிதம் என்னும் அடிப்படையிலும் தமிழ்நாடு 14.02 சதவீத வளர்ச்சி பெற்று முதலிடத்தில் இருக்கிறது.

ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பிலும் (ஜி.எஸ்.வி.ஏ.) தமிழ்நாடு 12.7 சதவீதத்துடன் முதலிடத்தில் இருக்கிறது. ஜிஎஸ்விஏ தேசிய சராசரி 7.3% மட்டும்தான் என்பது கவனிக்கத்தக்கது. 2025-26 நிதி ஆண்டில், அனைத்துத் துறைகளிலும் 0.5% கூடுதல் வளர்ச்சி இருந்தால், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 10.7 சதவீதத்தை எட்டும் எனப் பொருளாதார அறிஞர்கள் கணித்திருக்கிறார்கள்.

‘அடிப்படைகளில் உறுதி, நிலையான நிர்வாகம், தெளிவான தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றைக் கொண்டு நமது மாநிலம், மக்களின் எதிர்காலத்தை வடிவமைத்து வருகிறது. ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்னும் பேரிலக்கை நோக்கி வலிமை, உறுதியோடு விரைந்து கொண்டிருக்கிறோம்”” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்திருக்கிறார். நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு காட்டும் பாரபட்சத்துக்கு நடுவே, நம் முதல்வர் தீட்டிய திட்டங்களின் வெற்றிக்கு இந்தப் புள்ளிவிவரமே சாட்சி எனத் துணை முதல்வர் குறிப்பிட்டிருப்பதன் பின்னணியில் அரசியல் இருந்தாலும், அரசியல் மோதல்களைக் காரணமாகக் காட்டி, வளர்ச்சியில் கோட்டை விடாமல் செயல்படுவதற்காகத் தமிழ்நாடு அரசு பாராட்டைப் பெறுகிறது. பல நாடுகள் பொருளாதாரத்தில் தடுமாறிக்கொண்டிருக்கும் நிலையில், இந்தியாவின் ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு முன்னெடுக்கும் பொருளாதாரச் செயல்பாடுகள் மிகுந்த நம்பிக்கை அளிக்கின்றன.

பாலினச் சமத்துவம், அனைத்துப் பகுதிகளுக்கும் சமமான வளர்ச்சி என அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, இந்தச் சாதனையை எட்டியிருப்பதாக முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார். இதை அலங்கார வார்த்தைகளாக மட்டும் அல்லாமல் உளப்பூர்வமாக முன்னெடுத்துச் சென்றால் தமிழகம் மேலும் தலைநிமிரும்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14 சமத்துவ நாளாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டக் கழக அலுவலகத்தில் அண்ணலின் திருவுருவப்படத்திற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட மாநகர ஒன்றிய பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

ரூ.44.50 கோடி மதிப்பில் – சைதை

எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் புதிய கட்டடம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஏப். 15 -

சென்னை, சைதாப்பேட்டையில் எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய விடுதிக் கட்டடத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.4.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன் 484 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலிருந்து உயர்கல்வி பயில சென்னைக்கு வருகை தரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக, சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி கட்டப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்களால் 15.12.1961 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதுவரையில் சுமார் 25,000 மாணவர்கள் அந்த விடுதியில் தங்கி உயர்கல்வி பெற்று பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு அரசின் 2022-23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சென்னை, எம்.சி. இராஜா கல்லூரி விடுதி வளாகத்தில் தற்போது காலியாகவுள்ள இடத்தில் சமார் 1,01,101 சதுர அடி பரப்பளவில்

10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னையில் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பொறியியல், தொழில்நுட்பம், கலை மற்றும் அறிவியல் துறைகளில் பயின்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருவதால் அவர்களது தங்குமிடத் தேவையை பூர்த்தி செய்யவும், அவர்களது திறனை மேம்படுத்தவும் எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக மாணவர் விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.7.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.3.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்காக எம்.சி. இராஜா விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன் 44.50 கோடி ரூபாய் செலவில் விடுதி கட்டி முடிக்கப்பட்டு, நல்லிணக்கத்தை போற்றும் வண்ணம், சமத்துவ நாளான அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி மாணவர்களின் நலனுக்காக இந்த விடுதி திறக்கப்படும் என்றும், இக்கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதன்படி, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான நேற்று சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர், அங்குள்ள மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இப்புதிய விடுதிக் கட்டடம், மொத்தம் 1,01,101 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் 10 தளங்களுடன், 484 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கூடிய 121 தங்கும் அறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் தரை தளத்தில் சமையலறை, உணவருந்தும் கூடம், கண்காணிப்பாளர் அறை, பராமரிப்பாளர் அறை, ஓய்வறை, 4 மாணவர் தங்கும் வகையிலான அறைகள், முதல் தளத்தில் நூலக அறை, பன்னோக்கு கூடம், 9 மாணவர் தங்கும் வகையிலான அறைகள், இரண்டாம் தளம் முதல் பத்தாவது தளம் வரை ஒவ்வொரு தளத்திலும் நூலக அறை, 12 மாணவர் தங்கும் வகையிலான அறைகள் மற்றும் இக்கட்டடத்தின் மேல்தளத்தில் 35,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு நீர் தேக்க தொட்டிகள், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு வசதி, 1,20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, சுற்றுச்சுவர், உட்புற சாலை வசதிகள், தீயணைப்பு வசதிகள், மின்தூக்கிகள், பார்வையாளர் அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், ஆ.ராசா, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்ட மன்ற உறுப்பினர்கள் செல்வப்பெருந்தகை, த.வேலு, கிருஷ்ணசாமி, இ.பரந்தாமன், தாயகம் கவி, சிந்தனைச்செல்வன், அரவிந்த் ரமேஷ், பிரபாகர ராஜா, திருமதி தமிழரசி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில்

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா!

தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

மாதவரம், ஏப்.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், இந்திய அரசியலமைப்புச் சட்ட தலைமைச் சிற்பி அண்ணல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்று, தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம், சென்னை மாநகராட்சி அலுவலகம் அருகே, இந்திய அரசியலமைப்புச் சட்ட தலைமைச் சிற்பி அண்ணல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சமத்துவ நாள் கொண்டாடப்பட்டது.

முன்னதாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு, 17-வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு அண்ணலின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினார்.அதனைத் தொடர்ந்து தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அண்ணலின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,தூய்மை பணியாளர்கள் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கி மகிழ்ந்தனர்.தூய்மை பணியாளர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் சேலைகள் வழங்கப்பட்டது. மேலும் பொது மக்களுக்கு லட்டும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு வட்ட கழக நிர்வாகிகள் சி.மூர்த்தி, சி.பாலாஜி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவகுமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகப்ரியன், பாக முகவர்கள் டி.திவாகர், என்.நாகராஜன், வி.சுமீர், ஜி.கார்த்திக், வடபெரும்பாக்கம் எம்.மைக்கேல், பி.செந்தில்,இ.கார்த்திக், வழக்கறிஞர் எம்.என்.தளபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் விநாயகபுரம் கமலநாதன், செட்டிமேடு நாகலிங்கம்,கீர்த்தி, தீயம்பாக்கம் ஜான்சன், ஜி.பூபாலன், ஜோசப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் செய்திருந்தார்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், இந்திய அரசியலமைப்புச் சட்டத் தலைமை சிற்பி அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் அண்ணலின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டு, தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் ஆணைப்படி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. 17வது வட்ட செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் சி. மூர்த்தி, சி.பாலாஜி, எஸ். சிவகுமார், கே. சண்முகப்ரியன், டி. திவாகர், எம்.மைக்கேல், இ.கார்த்திக், பி.செந்தில், எம்.என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள்: கனிமொழி சோமு எம்.பி. – எழிலன் நாகநாதன் முன்னிலையில்

கழக மருத்துவ அணி சார்பில் சமத்துவ நாள் சிறப்பு கருத்தரங்கம்!

அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி – மோகன் காமேஸ்வரன் – சிந்தனைச் செல்வன் சிறப்புரை!

சென்னை, ஏப். 15 -

கழக மருத்துவ அணி நடத்தும் அண்ணல் அம்பேத்கர் அவர்ககளின் பிறந்த நாள் விழா ‘சமத்துவ நாள் சிறப்பு கருத்தரங்கம்’ இன்று (15.4.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி அளவில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வாழ்த்துக்களுடன் நடைபெறுகிறது.

கழக மருத்துவ அணி மாநில தலைவர் கனிமொழி சோமு எம்.பி. வரவேற்றுப் பேசுகிறார். கழக மருத்துவ அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ. கருத்துரை வழங்குகிறார்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மருத்துவர் மோகன் காமேஸ்வரன், சிந்தனைச் செல்வன் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கழக மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் டாக்டர் எம்.செந்தில்நாதன், டாக்டர் எ.வ.வே.கம்பன், டாக்டர் வரதராஜன், டாக்டர் ஆர்த.கோகுல் கிருபாசங்கர், டாக்டர் ஆர். அண்ணாமலை, டாக்டர் ஆர். இராஜேஸ்வரி மோகன்காந்தி,

டாக்டர் ஆர்.டி.அரசு, டாக்டர் ஜெ.அருண், டாக்டர் அஞ்சுகம் பூபதி, டாக்டர் கலை கதிரவன், டாக்டர்திலிப்ராஜகண்ணப்பன், டாக்டர் சே. வெற்றிவேல், எம்.ஏ.ரமேஷ், செண்பக விநாயகம், இராஜேஷ்பாபு, ஆர்.திலகவதி ஜெயராஜ், மன்சூர் அலிகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொள்கின்றனர்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் மற்றும் திருநீர்மலை பகுதிகளில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவ சிலைக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டார். அப்பொழுது துணை மேயர் கோ. காமராஜ் மண்டலத் தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர் அம்பேத்கர் அமைப்புகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் திரண்டு இருந்தனர்.